// தனிக் கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 2031 /ஆ1/2022, நாள் : 21.06.2022

பொருள்: பள்ளிக் கல்வி – தேசிய நல்லாசிரியர் விருது, 2022 – விண்ணப்பங்களை இணையதளம் மூலம் 30.06.2022-க்குள் விண்ணப்பிக்க ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை- 6. தமிழ்நாடு பள்ளிக் ஆணையர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.038318/ஐ/2022. நாள்: 02.06.2022 (ம) 20.06.2022.
2. Joint Secretary, Ministry of Education, Department of School Education & Literacy, New Delhi, Letter No. F1-16-2022-NAT, Dated: 27,05,2022,

#######

பார்வை 2-ல் காணும் புதுடெல்லி, மனிதவள மேம்பாட்டுத்துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தகுதியுள்ள ஆசிரியர்களை நேரிடையாக 30.06.2022-க்குள் http:/nationalawardstoteachers.education.gov.in என்ற இணையதள முகவரியில் நேரிடையாக பதிவு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நல்லாசிரியர் விருதுக்கு அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரயர்கள் மற்றும் ஆசிரியர்கள் நேரிடையாக இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கக் கூடாது. 2021-ஆம் ஆண்டில் குறைந்தது 4 மாதங்களாவது முறையான பணியில் பணியாற்றி இருக்க வேண்டும். ( 2021 ஏப்ரல் 30 வரை )

அலுவலகங்களில் நிர்வாகப்பணி மேற்கொள்ளும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்க கூடாது. மனிதவள மேம்பாட்டுத்துறையில் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, ஆசிரியர்கள் 30.06.2022-க்குள் மேற்குறிப்பிட்ட இணைய தளத்தில் மட்டுமே நேரிடையாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(த.பி.பா.)

மேற்காண் விவரங்களை விரிவாக வேலூர் மாவட்ட நாளிதழில் செய்தி வெளியிட்டு, குறிப்பாக வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் தகவல் தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு உடனடியாக சுற்றறிக்கை அனுப்பி தகவல் தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், தெரிவிக்கலாகிறது. அலுவலக விளம்பர பலகையில் விரிவாக விளம்பரம் செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு- National Award Gudelines.

ஒ/ந முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :

1. மாவட்ட கல்வி அலுவலர், வேலூர்.
(தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)
2. அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளித் – தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கைக்காக)

நகல்- சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களுக்கு
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

21 JUN 2022
வேலூர் - 632 009

//ப.த.//